''பள்ளிக்கூடம் போறபோது பண்டம் வாங்கக் கொடுக்கிற காசை சேர்த்து வைக்கிறதுல ஆரம்பிச்சது 'கலெக்ஷன்' பழக்கம். நாணயம், ரூபாய் நோட்டு வரிசைல சேர்ந்திச்சு வித்தியாசமான ஸ்டாம்புகளும். கையில கிடைக்கிற ஸ்டாம்புகள்ல கண்ணுக்குத் தெரியறதெல்லாம் காந்தி உருவ ஸ்டாம்பாத்தான் இருக்கும். கலெக்ஷன் பாத்த வகுப்பு டீச்சர், காந்தி பத்தின நிறைய புத்தகங்களைத் தந்து படிக்கச் சொன்னாங்க. அப்பத்தான் காந்தியோட நெருக்கம் ஆரம்பிச்சது.

'இதை எதுக்கு சேர்த்து வச்சிட்டுத் திரியறான்'ங்கிற மாதிரியான பேச்சுகள் கேக்காதது பெரிய பிளஸ் பாயின்ட். வீட்டைச் சுத்தம் செய்யறப்போ ஏதாவது ஸ்டாம்ப் கிடந்தாக்கூட எங்கம்மா பத்திரப்படுத்தி வைச்சு கொடுப்பாங்க. படிச்சு முடிஞ்சதும் இந்துஸ்தான் பெட்ரோலியத்துல கிளார்க் வேலை கிடைச்சதும் வசதியாப் போச்சு. கையில காசு புழங்கினதுல ஸ்டாம்ப் சேகரிப்பு நல்லாவே போச்சு.

காந்திக்கு 1948-ம் வருஷம் நாம வெளியிட்ட முதல் ஸ்டாம்ப்ல இருந்து, இப்ப வரை உள்ள எல்லா ஸ்டாம்ப்களையும் சேர்த்துட்டேன். அரிதான சில ஸ்டாம்ப்களை பெரும் பணம் செலவழிச்சுக் கொண்டு வந்தேன். இதுக்காக ஆபீஸ்ல லோன் கூட போட்டிருக்கேன்னா பாருங்க...






இந்தச் சூழல்லதான் காந்திக்கு வெளிநாடுகள்லயும் ஸ்டாம்ப் வெளியிட்டிருக்காங்கங்கிற சேதி எனக்குத் தெரிய வந்திச்சு. காந்தி முழுமூச்சா எதுத்த பிரிட்டன், காந்தியோட கொள்கைக்கு நேரெதிரான ஹிட்லர் ஆண்ட ஜெர்மனி, இடி அமீன் ஆண்ட உகாண்டா போன்ற நாடுகள்லாம் கூட வெளியிட்டிருக்காங்க. பிரிட்டன்ல இப்பவும் டெலிபோன் ரீசார்ஜ் கார்டுகள்ல காந்தி வர்றார். ஆனா, இந்தியாவுல டெலிபோன் கார்டுகள்ல இன்னும் கூட தலைவர்களைக் கொண்டு வரலை. ப்ரீத்தி ஜிந்தாவையும், ஐஸ்வர்யா ராயையும் போட்டுப் பெருமைப்படுத்திட்டிருக்கோம். மத்த நாடுகளுக்கெல்லாம் இதைப் பண்ணணும்னு என்ன அவசியம்? உண்மையிலேயே நாமெல்லாம் பெருமைப்படணும்'' என்கிற ராஜேஷ், வெளிநாட்டு அஞ்சல் தலைகளை நண்பர்கள் மற்றும் டீலர்கள் சிலரின் உதவியுடன் இந்தியா கொண்டு வந்திருக்கிறார்.



**"பிரிட்டன்ல இப்பவும் டெலிபோன் ரீசார்ஜ் கார்டுகள்ல காந்தி வர்றார். ஆனா, இந்தியாவுல டெலிபோன் கார்டுகள்ல இன்னும்கூட தலைவர்களைக் கொண்டு வரலை. ப்ரீத்தி ஜிந்தாவையும், ஐஸ்வர்யா ராயையும் போட்டுப் பெருமைப் படுத்திட்டிருக்கோம்."**







முதல் வெளிநாடாக 1961-ல் அமெரிக்கா வெளியிட்ட அஞ்சல்தலையிலிருந்து 1969-ல் காந்தியின் நூற்றாண்டை ஒட்டி மொத்தமாக வெளியிட்ட 25 நாடுகளின் ஸ்டாம்ப்கள் வரை வகைவகையாகப் பிரித்து வைத்திருக்கிற இவரிடம், அரிய புகைப்படங்கள், நாணயங்கள், கரன்சிகள் என காந்தி சம்பந்தப்பட்ட மற்ற கலெக்ஷன்களும் உண்டு.

''இந்திய சுதந்திர தினத்தை காந்தி மகிழ்ந்து கொண்டாடிய மாதிரியான காட்சிகளை நாம் பார்த்ததில்லை. கயானா நாட்டுல ஒரு ஸ்டாம்ப் வெளியிட்டிருக்காங்க. சுதந்திர தினத்தன்னைக்கு அவர் குழந்தைகள்கூடச் சேர்ந்து ஆடிப்பாடி மகிழ்ற மாதிரி'' என்கிற இவரது ஒரேயொரு வருத்தம்...

இத்தனை நாடுகள் தபால் தலை வெளியிட்டிருக்கிறபோது 1947-க்கு முன் நம்மோடு இருந்த பாகிஸ்தான் இதுவரைக்கும் ஒரு தபால்தலைகூட வெளியிடாததுதான்! 'அவங்க சுதந்திரத்துக்கும் சேர்த்துதான சார் மகாத்மா பாடுபட்டார்?' - அப்பாவியாகக் கேட்கிறார் ராஜேஷ்.

**- அய்யனார் ராஜன்**

படங்கள்: **லூயிஸ் பால்**